ஒழுங்காகத் தயாரித்துக் கொடுப்பார். ஆகவே, அப்படிப் பட்ட தனி அதிகாரியை அங்கே நியமித்து, பல ஆண்டு கால மாக நீர்ப்பாசன வசதியில்லாத அந்தப் பகுதிகளுக்கு நீர்ப் பாசன வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலசந்தூர் கால்வாய்க்கு கரை இல்லை. 1965ஆம் வருஷம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 900 அடி அக்வயர் செய்து, அந்தக் கண்மாயை நீட்டித்துக் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மழைக் காலங்களில் அந்த கிராமத்து மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான பைல் இருக்கிறது; ஆனால் அந்த பைல் திடீரென்று காணாமல் போகின்றது. அதற்கு துரித நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். தரக்குடி கண்மாய்க்கு வேண்டிய நிலம் இருக்கிறது. ஆகவே அதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

2. ஒழுங்குப் பிரச்னைகள் (தொடர்ச்சி.)

(ஆ.) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது (தொடர்ச்சி)

திரு. வெ. இராஜசேகரன் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

* **

(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள் யார் பாஸ் கொடுத்தார்கள், யார் எல்லாம் இதற்குப் பொறுப்பு என்று கேட்கச் சொல்லி யிருக்கிறேன். (கூச்சல்—குழப்பம்) இந்த அவையை அவமதிக் கிறார் என்று சொன்னால், உங்களையும் அவமதித்ததாகத் தான் அர்த்தம். அதைப் பற்றி நான் விசாரிக்கச் சொல்கி றேன். (கூச்சல்—குழப்பம்).

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1980 ஜுலை 28]

திரு. இரா. தாமரைக்கனி: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே * * (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது வரை இந்தப் பிரச்சினை குறித்துப் பேசிய அனைத்தையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கி விடும்படி உத்திரவிடுகிறேன். கூச்சல்—குழப்பம்)

[முற்பகல் 11.50]

திரு. துரைமுருகன்: தீர்ப்பை நான் ''சேலஞ்ச்'' பண்ண வில்லை. உங்களுடைய தீர்ப்பின்மீது கருத்துச் சொல்ல விழையவில்லை. இந்த அவையில் நோட்டீஸ் வீசியது இந்த அவையை அவமதித்தது என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது. இவ்வாறு பல்வேறு முறை நடைபெற்று நோட்டீஸ் வீசியவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த அவையில் நோட்டீஸ் வீசியதால் அந்த நபர் தண்டிக்கப்பட வேண்டியவர்தான் என்பதிலே மாறுபாடான கருத்து கிடையாது. * * * *

திரு. சேலம் மு. ஆறுமுகம்: * *

திரு. இரெ. இராசமாணிக்கம்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கனவே உத்தரவிட்டபடி இதுவரை இந்தப் பிரச்சினை குறித்து பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(6) வரவு—செலவுத் திட்டம் 1980-81—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனக் கோரிக்கை சம்பந்தமாக கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தை நான் இந்தச் சபையின் முன்பாக தெரிவிக்க விரும்புகிறேன். நீர்ப்பாசனத்தில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். தமிழகத்திலே விவசாயம் நவீன முறைகளில் செய்யப்படுகிறது என்பதும், அதற்கு அதிகப்படியான மூலதனம் போடப்படுகிறது என்பதும் அனைவரும் அறிந்திருக்கக்கூடிய உண்மை. ஆகவே, இம்மாதிரி விவசாயத்தில் அதிக மூலதனத்தைக்கொண்டு நவீன முறைகளில் செய்யப்படக்கூடிய விவசாயத்திற்கு உத்தரவாதத்துடன் தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையில் அரசு பொறுப்புடனே நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.